**தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான

சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமத்திற்கான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 53,474,393 மற்றும் ரூபா 375,028,008 கிரயமான முறையே மோட்டார் வாகனங்கள் மற்றும் ஆய்வுகூட உபகரணங்கள் கணக்காய்வின் போது கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், நியமத்தின் 90 மற்றும் பத்தி 92(ஆ) பந்தியின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் வகுப்பு மீள்கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதிகளில் குறிப்பிடப்படும் போது | கணக்காய்வு குறித்த தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் கணக்காய்வு அறிக்கையில் தவிர்க்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட எஞ்சிய சொத்துக்களின் வெளிப்படுத்தலை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் பின்பற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

மீட்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட போதிலும் தற்போதும் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 160,385,708 கிரயமான ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தொடர்பான வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் கொடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டு பயன்பாட்டிற்கு வந்த ரூபா 735,171,684 கிரயமான கட்டிடம் நடைமுறைவேலையாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக கட்டிடத்தின் மீதி குறைவடைந்து இருந்ததுடன் நடைமுறை வேலை கணக்கு மீதியில் அதிகரிப்பு காணப்பட்டது. | புதிய கட்டிடத்தின் பெரும்பாலான பணிகள் பூர்த்தியடைந்த போதிலும் பெரும்பாலான ஒப்பந்ததாரர்களின் இறுதி விலைப்பட்டியல் செலுத்தப்பட்டிருக்கவில்லை. எனவே, புதிய கட்டிடத்தை மூலதனமாக்குவதற்கான சாத்தியம் காணப்படவில்லை. | கட்டிட நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டால் மூலதனமாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சேவைகளை வழங்குவதற்காக பெறப்பட்ட ரூபா 1,701,593 வருமானம் நிதிக்கூற்றுக்களில் வருமானமாக இனங்காணப்படுவதற்குப் பதிலாக நடைமுறைப் பொறுப்புக்களாகக் கணக்கீடு செய்யப்பட்டதால் ஆண்டுக்கான பொறுப்புக்கள் மற்றும் மிகை நிதிக்கூற்றுக்களில் அப் பெறுமதியில் முறையே அதிகரித்தும் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன. | இந்த பணம் மாவட்ட அலுவலகங்களில் இருந்து அனுப்பப்படும் பணம் அல்ல, மாறாக பிரதான அலுவலகம் தொடர்பான பணமாகும். இந்த ரூபா 1,701,593 மீதியில், ரூபா 1,193,960 இதுவரை இனங்காணப்பட்டுள்ளதுடன் இது கணக்குக் கூற்றுக்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. | இனங்காணப்படாத சொத்து பெறுவனவுகளை முறையாக இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நிறுவனத்தால் பூர்த்திசெய்யப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பான ரூபா 7,038,077 பெறவேண்டியவைகள் நடைமுறைவேலையாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக நடைமுறையல்லாத சொத்துக்கள் மற்றும் பெறவேண்டியவைகள் முறையே அதிகரித்தும், குறைத்தும் காட்டப்பட்டுள்ளன. | இது தொடர்பாக அறவிடப்படும் பணத்தின் விபரங்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அந்த நிறுவனங்களின் உடன்படிக்கையை பெற்ற பின்னர் நிறுவனத்தின் கணக்கு முறைமையின் மூலம் விலைப்பட்டியல்களை வழங்குவதற்கு நாங்கள் நடவடிக்கையை எடுப்போம். | பூர்த்திசெய்யப்பட்ட நிர்மாண செயற்திட்டங்கள் தொடர்பான பணத்தை அறவிடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 02 | மனித வளத் திட்டமொன்று நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அரச சேவைக்கான நீண்டகால மனித வளத் திட்டத்தைத் தொகுப்பதற்கு வழிநடாத்தல் குழு மற்றும் உப குழுக்களை நியமனம் செய்வதற்கு | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் மனித வளத் திட்டத்தைத் |

| | | |
|---|---|---|
| ஆம் பந்தி மற்றும் 02 ஆம் இணைப்பு படிவம் | பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரை நியமனம் செய்வதற்கு பொதுச் சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு அனுப்பப்பட்டது. உள்ளூராட்சி அமைச்சின் ஆலோசனைக்குப் பின்னர் இது தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடம் விசாரித்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் காசு அடிப்படையில் வரி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் அதன் தொடக்கத்தில் இருந்து பெறுமதிசேர் வரியை காசு அடிப்படையில் செலுத்தி வருகிறது. இது தொடர்பாக அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்பதை கண்டறிந்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் விசாரித்து உரிய அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 235,379,561 மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 266,985,727 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 31,606,166 வீழ்ச்சியொன்று காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. செயற்திட்ட முகாமைத்துவ துறையின் மிகை ரூபா 5,453,191 ஆலும், புவித் தொழில்நுட்ப மற்றும் பொறியியல் துறையின் மிகை ரூபா 4,220,114 ஆலும் மற்றும் மண்சரிவு ஆராய்ச்சி மற்றும் இடர் முகாமைத்துவ துறை ரூபா 3,563,199 ஆலும் குறைவடைந்தமை இவ் வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

சுற்றாடல் கற்கைகள் மற்றும் சேவைகள், மனித குடியேற்ற திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி மற்றும் கட்டுமானப் பொருட்கள் ஆகிய துறைகளில் 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டில் முறையே 146,130 ஆலும் 170 சதவீதத்தாலும் மிகையில் அதிகரிப்பொன்று இருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆராய்ச்சி புவி தொழில்நுட்பம் மற்றும் பொறியியல், மண்சரிவு ஆராய்ச்சி மற்றும் இடர் முகாமைத்துவம் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் ஆகிய துறைகளில் 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டில் 29, 36 மற்றும் 28 சதவீத வீழ்ச்சியொன்று இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்திற்கு சட்ட அந்தஸ்தை வழங்குவதற்கான சட்டமூலத்தை தயாரிப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்த அமைச்சரவை விஞ்ஞாபனம் 2021 ஒக்தோபர் 12 இல் அங்கீகரிக்கப்பட்ட போதிலும் அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட சட்டமூலம் 2022 செப்தெம்பர் | தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு சட்ட அந்தஸ்தை வழங்குவதற்கான வரைவு சட்டமூலத்திற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. இந்த சட்டமூலம் மற்றும் அமைச்சரவை விஞ்ஞாபனம் | சட்டத்தை விரைவில் நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 26 இல் சட்ட வரைஞர் திணைக்களத்தினால் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டு 31 வருடங்கள் கடந்துள்ள போதிலும் சட்டமூலத்தை தயாரித்து பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்பிப்பதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக சட்ட அந்தஸ்தை வழங்குவதற்கான சட்டமூலத்தை நிறைவேற்ற முடியவில்லை. | 2024 பெப்ரவரி 21 இல் கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்திற்காக பாதுகாப்புச் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்ற பின்னர், இது அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு, பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். | |
| (ஆ) | 2013 ஆம் ஆண்டு முதல் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுக்காக அமுல்படுத்தப்பட்டு வரும் குழு ஆயுள் காப்புறுதி மற்றும் மருத்துவக் காப்புறுதித் திட்டத்திற்காக ரூபா 9,815,793 தொகை காப்புறுதிக் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் காப்புறுதித் திட்டத்தை அமுல்படுத்துவதற்குத் தேவையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.<br><br>மேலும், குழு ஆயுள் காப்புறுதி மற்றும் மருத்துவக் காப்புறுதி திட்டத்தின் கீழ் 29 சந்தர்ப்பங்களில் போலியான விலைப்பட்டியல்கள் மற்றும் போலி உத்தியோகபூர்வ முத்திரைகளை தயாரித்து ரூபா 1,820,000 தொகையான மருத்துவ விலைப்பட்டியல்களை நிறுவனத்தின் 23 ஊழியர்கள் மீள்நிரப்பு செய்துள்ளனர்.<br><br>போலியான ஆவணங்களை தயாரித்து காப்புறுதி இழப்பீடு பெற்றிருந்த ஆறு உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 440,000 தொகையை நிறுவனம் சேகரித்திருந்த போதிலும் தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அவர்கள் அந்த உத்தியோகத்தர்களை கையாளவில்லை. | இந்த மோசடி சம்பவம் குறித்த தகவல் வெளியானதும், விசாரணை நடாத்தி அனைவரிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டிருந்தது. மோசடியாகப் பெற்ற பணத்தைச் செலுத்துவதற்கு ஒப்புக்கொண்ட ஊழியர்கள் குழு தற்போது அதனை திருப்பிச் செலுத்தி வருகின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். அதன் பிரகாரம் பெறப்படும் அறிவுறுத்தல்களின் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | காப்புறுதித் திட்டத்தை அமுல்படுத்துவதற்குத் தேவையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். மேலும், மோசடி ஆவணங்களை தயாரித்து காப்புறுதி இழப்பீடுகளை பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்கள் தொடர்பில் தாபன விதிக்கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ஆட்சேர்ப்பு நடைமுறையின் ஏற்பாடுகளை மீறி சிரேஷ்ட விஞ்ஞானி - AR 2 பதவிக்கான ஆட்சேர்ப்பு மற்றும் 02 நேர்முகப்பரீட்சைகளை | இது தொடர்பாக பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் அறிக்கையொன்றை வழங்கியிருந்ததுடன் இது தொடர்பாக மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டு | ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடாத்துதல் என்பவற்றிற்காக ஆரம்ப ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு வெளியே அங்கீகரிக்கப்படாத நடைமுறை காரணமாக ஆரம்ப நேர்முகப்பரீட்சையில் அதிக மதிப்பெண்களைப் பெற்ற மூன்று உத்தியோகத்தர்கள் பதவி உயர்வு பெறுவதற்கான வாய்ப்பை இழந்தனர். | வருகிறது. | |
| (ஈ) | செயற்திட்டச் சேவைகளுக்கான படிகளைச் செலுத்தும் போது, முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரத்துடனும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடனும் உரிய படிகள் செலுத்தப்பட வேண்டும் என 2021 திசெம்பர் 28 இல் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பரிந்துரைத்திருந்த போதிலும் ரூபா 1,927,035 தொகை அத்தகைய அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் செயற்திட்ட சேவைகளுக்கான படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்த நிறுவனம் மூலம் சேவைகளைச் செய்யும் பொறியியலாளர்கள் மற்றும் புவியியலாளர்களின் பதவிகளுக்கு சம்பளம் வழங்கப்படும். இந்த ஆலோசனை சேவையில் நிபுணத்துவ சேவைகளை வழங்குவதற்காக சம்பளத்தில் 1/3 கொடுப்பனவின் அடிப்படையில் படிகளை வழங்குவதற்கு முகாமைத்துவக் குழு வழங்கிய அங்கீகாரத்திற்கு உட்பட்டு 2023 ஆம் ஆண்டில் இந்த படிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு செலுத்தப்பட்டுள்ளன. | உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 14 மாவட்டங்களில் மண்சரிவு முன்னெச்சரிக்கைகளை வழங்குவதற்காக 330 தானியங்கி மழை மானிகள் நிறுவப்பட்டுள்ளன, அவற்றில் 251 மழை மானிகள் மாத்திரமே மண்சரிவு முன்னெச்சரிக்கைகளை வழங்குவதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அவசர செயற்பாட்டு நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. தற்போது 198 மழைமானிகளில் இருந்து மாத்திரமே தகவல் பெறப்படுவதால், மீதமுள்ள மழை மானிகள் செயற்படாமல் அல்லது தகவல் பெறாமல் இருந்தன. | மண்சரிவு அபாயம் அதிகம் உள்ள இடங்களில் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தால் அடையாளம் காணப்பட்ட மண்சரிவு அபாயமுள்ள 14 மாவட்டங்களில் 332 தானியங்கி மழை மானிகள் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளன.<br><br>இந்த மழை மானிகள் அனைத்தும் 05 ஆண்டுகளுக்கும் மேலாக உள்ளதுடன் 2024 ஏப்ரல் 22 அளவில் கிட்டத்தட்ட 100 மழை மானிகள் செயலிழந்திருந்தன.<br><br>மண்சரிவு எச்சரிக்கை அறிவிப்புக்கள் மண்சரிவு முன்னெச்சரிக்கைகளாக நிலவும் சூழ்நிலையின் அடிப்படையில் வெவ்வேறு முறைகளைப் பயன்படுத்தி வழங்கப்படுகின்றன. | தானியங்கி மழை மானி முறைமை முறையாக பேணப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு, மண்சரிவு அபாயம் உள்ள 11 மாவட்டங்களில் இருந்து மண்சரிவு பரிசோதனை | 2023 செப்தெம்பர் 26 முதல் ஆண்டின் இறுதி வரை தீவின் மலையகப் பகுதிகளைப் பாதித்த கடும் மழை காரணமாக பெருமளவிலான மண்சரிவு | பரீட்சிப்பிற்காக கொடுக்கப்பட்ட விண்ணப்பங்களை உடனடியாக சரிபார்த்து |

| | | | |
|---|---|---|---|
| | அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்காக 5,388 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. மேலும் பரிந்துரைகள் வழங்கப்பட வேண்டிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை 1,545 ஆகும். மேலும், 2023 திசெம்பர் 31 அளவில் மேலும் பரிந்துரைக்கப்பட வேண்டிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டு பெறப்பட்ட விண்ணப்பங்கள் உட்பட 2,889 ஆகும், இது அந்த ஆண்டில் பரிந்துரைகள் வழங்கப்பட வேண்டிய விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் 43 சதவீதமாகும். நிறுவனத்தில் பணிப்பாளர், சிரேஷ்ட விஞ்ஞானி, விஞ்ஞானி, முகாமையாளர் மற்றும் உதவிப் பணிப்பாளர் (நிதி) ஆகிய 05 சிரேஷ்ட நிலை பதவிநிலைகளில் 53 வெற்றிடங்கள் இருப்பது இந்த நிலைமையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. | அபாயப் பகுதிகள் பதிவாகியுள்ளன. அன்றைய நாளின் அதிக தேவையின் அடிப்படையில் நிறுவனத்தால் பணிக்கமர்த்தப்பட்ட வரையறுத்த பணியாளர்களை பயன்படுத்தி வயல்களை மேற்கொண்ட பிரதேச செயலாளர்களுக்கு உடனடி நடவடிக்கைக்கான பரிந்துரைகள் அடங்கிய அவசர பதில் அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.<br><br>மண்சரிவு அபாயம் இல்லாத இடங்களுக்கான கோரிக்கைகளை இரத்து செய்த பின்னர், பரிந்துரைகள் வழங்கப்படாத கோரிக்கைகளுக்கான எதிர்கால அறிக்கைகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | அறிக்கைகளை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மழை மானிகளை தயாரித்து, விற்பனை செய்வது அல்லது விநியோகிப்பது நிறுவனத்தின் வேலையொன்றாக இல்லாத போதிலும் ரூபா 1,502,539 பெறுமதியான மூலப்பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு 480 பாரம்பரிய மழை மானிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. பதுளை, கேகாலை மற்றும் நுவரெலியா ஆகிய 03 மாவட்டங்களை உள்ளடக்கி நிறுவனத்தால் நிறுவப்பட்டுள்ள 145 பாரம்பரிய மழை மானிகள் சுமார் 02 வருடங்களாக தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வு திகதியான 2023 நவம்பர் 13 இற்கு பின்னர், 370 மழை மானிகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளன, மேலும் 110 மழை மானிகள் ரூபா 605,000 இற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. | மையப்படுத்தப்பட்ட இடத்திலிருந்து முன்கூட்டியே எச்சரிக்கைகளை வழங்குவதற்கு வழக்கமான மழை மானி தரவைப் பயன்படுத்த முடியாது. அதற்காக தானியங்கி மழை மானிகளின் தரவு பயன்படுத்தப்படுகிறது. ஒரு ஆராய்ச்சி நிறுவனமாக, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் இதற்குத் தேவையான வழக்கமான மழை மானிகளை உருவாக்கியது. அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள மண்சரிவு அபாயப் பகுதிகளில் வாழும் சமூகங்களின் ஆதரவுடன் சமூக அடிப்படையிலான நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் மக்களின் மண்சரிவு அபாய நிலைமையை முகாமை செய்வதே நிறுவனத்தின் நோக்கமாகும். | நிறுவனத்தின் நோக்கங்களில் இருந்து விலகி நடவடிக்கைகள் எடுக்கப்படக்கூடாது. |
| (ஈ) | கட்டிட மதிப்பீடு மற்றும் தர அறிக்கையிடலுக்கான மூலோபாய அபிவிருத்தி செயற்திட்டத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கு | கட்டிட மதிப்பீடு மற்றும் தர அறிக்கைகளை வழங்குவது தொடர்பான கோரிக்கைகளின் அளவு, சரிபார்க்கப்பட்ட விண்ணப்பங்களின் அளவு, | மதிப்பீடு மற்றும் தர அறிக்கைகள் தொடர்பான தகவல்களை ஒழுங்கான |

| | | |
|---|---|---|
| திறைசேரியிலிருந்து ரூபா 125 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2019 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டு 2023 இல் பூர்த்தி செய்யப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 105 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. கட்டிட மதிப்பீடு மற்றும் தர அறிக்கை வழங்குதல், விண்ணப்பங்களின் எண்ணிக்கை, பரீட்சிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை, வழங்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை போன்ற தகவல்களைப் பேணுவதற்கு சரியான முறைமையை நிறுவுவதில் நிறுவனம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | வழங்கப்பட்ட அறிக்கைகளின் அளவு போன்ற தகவல்களை நிறுவனம் தொடர்ந்து பேணுகிறது. எனினும், ஒரு புதிய மென்பொருளின் மூலம் இந்தத் தகவலை சேகரித்து பேணுவதை விரைவாகவும், முறையாகவும் செய்யும் நோக்கத்துடன், தேவையான பூர்வாங்க நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருகின்றன. | முறையில் பேணுவதற்கு சரியான தகவல் முறைமையை தாபிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 குறைப்பயன்பாடுடைய நிதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரி மற்றும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து பல்வேறு நோக்கங்களுக்காக பெறப்பட்ட ரூபா 309,847,914 தொகை 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொடர்புடைய பணிகளுக்குப் பயன்படுத்தப்படாமல் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. இதில் ரூபா 160,525,112 நிலையான வைப்பு 1 முதல் 7 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் இருந்தது. | 2023 ஆம் ஆண்டு தொடர்பான செயற்திட்டங்களுக்காக திறைசேரியிலிருந்து பணம் பெறுவதில் இருந்த நிச்சயமற்ற தன்மை மற்றும் தாமதம் காரணமாக செயற்திட்டங்களை தொடங்குதல் தாமதமானதுடன் அனைத்து செயற்திட்டங்களும் 2024 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளன. | நிதியேற்பாடுகள் வழங்கப்பட்ட ஒதுக்கப்பட்ட பணிகளை திட்டமிட்டவாறு மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்திற்கு காற்று உமிழ்வு (air emission) நிதியத்திலிருந்து நன்கொடையாக பெறப்பட்ட ரூபா 41,376,000 பெறுமதியான நடமாடும் காற்றின் தர கண்காணிப்பு அலகு பொருத்தப்பட்ட லொறியானது 4 வருடங்களாக நடமாடும் கண்காணிப்பு சேவையை வழங்காமல் கொழும்பு மாநகர சபை வளாகத்திற்கு மாத்திரம் சேவையை வழங்கியிருந்தது. | காற்றின் தரத்தை அளவிடுவதற்கு ஏனைய நகர்ப்புறங்களுக்கு எடுத்துச் செல்வதற்கு அதிக செலவு ஏற்படுவதாலும் அதற்கான நிதியேற்பாடுகள் இல்லாததாலும் கொழும்பு மாநகரசபை வளாகத்தில் அதற்கான அலகு வைக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டில் இந்த அலகைப் பயன்படுத்தி 25 மாவட்டங்களின் முக்கிய நகரங்களில் காற்றின் தரத்தை அளவிடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | கொழும்பு மாநகர சபை வளாகம் மற்றும் ஏனைய நகரப்பகுதிகளுக்கு சேவைகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

### 3.5 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அலுமினியம் மற்றும் உருக்கு வேலை (பாகப் பிரிவினையிடுதல் வேலை), கண்ணாடி வெட்டு சுவர் | ஒப்பந்ததாரர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகளைக் கருத்தில் | திட்டமிட்டவாறு நிர்மாணப் பணிகளை பூர்த்தி |

| | | | |
|---|---|---|---|
| | வடிவமைப்பு, வழங்கல் மற்றும் நிறுவுதல், மென்மையான கதவுகள் உட்பட கண்ணாடி முகப்பு மற்றும் நிறுவனத்தின் புதிய கட்டிடத்தின் இயந்திரவியல், மின்சார மற்றும் குழாய் வேலைகள் 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ரூபா 179,941,637 பெறுமதியில் மூன்று ஒப்பந்ததாரர்களிற்கு வழங்கப்பட்டிருந்தன. ஒப்பந்தங்களின் திகதிகள் 08 சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்ட போதிலும் ஒப்பந்ததாரர்கள் அந்தக் காலப்பகுதியிலும் ஒப்பந்தங்களை பூர்த்திசெய்யத் தவறியிருந்தனர். இந்த ஒப்பந்தங்களுக்கு ரூபா 164,077,150 பெறுமதியில் மேற்கொள்ளப்பட்ட பணிக்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட போதிலும் தாமதக் கட்டணங்கள் தொடர்பாக உடன்படிக்கையில் நிபந்தனை இல்லாததால் தாமதக் கட்டணங்களை அறவிடும் வாய்ப்பு இழக்கப்பட்டது. | கொண்டு ஒப்பந்த காலத்தை நீடிப்பதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது, அதன் பிரகாரம் தாமதக் கட்டணம் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | செய்வதற்கும், தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மேற்படி கட்டிடத்திற்கு வற் இல்லாமல் தீ பாதுகாப்பு மற்றும் கண்டறிதல் முறைமையை வழங்கி, பொருத்துதல் மற்றும் நிறுவுதல் தொடர்பான பெறுகை செயன்முறை ரூபா 8,281,955 பெறுமதியில் ஒப்பந்ததாரர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. 2023 யூலை 24 முதல் 30 நாட்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய இந்தப் பணி கணக்காய்வு திகதியான 2023 நவம்பர் 24 அளவில் 120 நாட்கள் கடந்திருந்த போதிலும் பூர்த்தி செய்யப்பட முடியவில்லை. ரூபா 6,811,951 பெறுமதியில் செய்யப்பட்ட பணிக்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் தாமதக் கட்டணங்கள் தொடர்பாக உடன்படிக்கையில் நிபந்தனை இல்லாததால் தாமதக் கட்டணங்களை அறவிடும் வாய்ப்பு இழக்கப்பட்டிருந்தது. | இப்பணி 30 நாட்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது, ஆனால், ஏனைய ஒப்பந்ததாரர்களின் பணிகளில் சில பகுதிகளை பூர்த்தி செய்வதில் தாமதம் ஏற்பட்டதால், இந்த ஒப்பந்ததாரரின் பணியை பூர்த்தி செய்தல் இடையூறாக உள்ளது. மேற்கூறிய உண்மையைத் தவிர, நடைமுறைத் தேவைப்பாடுகள் காரணமாக, ஆரம்பத் திட்டங்களுக்கு மேலதிகமாக இந்த ஒப்பந்தத்தில் மேலதிக வேலைகள் செய்யப்பட வேண்டியிருந்ததன் காரணமாக மேலதிக நேரம் வழங்கப்பட வேண்டியிருந்தது. | திட்டமிட்டவாறு உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |